உன் நினைவில் சங்கமிக்கும் என் இதயம்

உன் நினைவில் சங்கமிக்கும் என் இதயம் -அது
உன் வழியைப் பின் தொடரும் வாழ்வில் நிதம்
பின் தொடரும் .....வாழ்வின் நிதம்

1
உன் உறவினில் வழி பிறந்தது
உண்மை அன்பின் சுவை தெரிந்தது
தன்னலத்தின் தழையறுந்தது
எந்தன் இயேசுவே -(2)
உன் வழியினில் நான் நடந்திட
உன் பணியினை நான் தொடர்ந்திட
உன் உடலும் குருதியுமே உறுதி தந்தது
உந்தன் அன்பிற்கெல்லையில்லையே
உன் நினைவினில் துன்பமில்லையே –(2)

2
வழி தவறிய ஆடென உனதருள்
வழியினை நான் மறந்திட
என்னைக்காண கல்லும் முள்ளும்
அலைந்து தேடினாய்-2
ஒரு கிளையென நீ இருந்திட
அதன் கொடியென நான் படர்ந்திட
உந்தன் அன்பின் நெஞ்சினிலே என்னை மூடினாய்
உந்தன் அன்பிற்கெல்லையில்லையே
உன் நினைவில் துன்பமில்லையே –(2)